செ.வெ.எண்.17 நாள்.06.10.2017

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் (தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா) கிராமப்புற இளைஞர்களுக்கான இலவச வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி திட்ட விழிப்புணர்வு பிரச்சார ரதத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் (தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா) கிராமப்புற இளைஞர்களுக்கான இலவச வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி திட்ட விழிப்புணர்வு பிரச்சார ரதத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.10.2017) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தீன்தயாள் உபாத்யாயகிராமின் கௌசல்யா யோஜனா மிஷன் அந்த்யோதயா மூலம் 01.10.2017 15.10.2017 வரை நடைபெறவுள்ள "Gram SamrithiEvamSwachathaPackwada" கொண்டாட்டத்தில் முதற்கட்டமாக திறன் மேம்பாட்டுமுகாம், வேலைவாய்ப்பு முகாம் மற்றும் திறன் பயிற்சிகள் தொடர்பாக 85 கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக திருநெல்வேலி மாவட்டத்தில் ரதம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி 06.10.2017 முதல் நடைபெறவுள்ளது. இந்த ரதம் செல்லும் இடங்களில் தீன் தயாள் உபாத்தியாயகிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தில் 18 முதல் 35 வயது நிரம்பிய கிராமப்புற இளைஞர்களுக்கான இலவச வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி திட்டம் பெற கிராமப்புற இளைஞர்கள் கைபேசி செயலியில் (இணையதளமுகவரிwww.kaushalpanjee.nic.in)தங்களது சுயகுறிப்பினை பதிவு செய்வது தொடர்பான விண்ணப்பங்கள் அளிக்கப்படவுள்ளது. இது தொடர்பான விபரங்களுக்கு திருநெல்வேலி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு அலுவலகத்திலும், அனைத்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் அனைத்து ஊராட்சிகளிலும் பெற்றுக் கொள்ளலாம். மேலும், கீழ்க்குறிப்பிட்ட இணையதள முகவரியிலும் இது தொடர்பான விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

www.ddugky.gov.in

f/DDUGKYSkillsindia

/DDUGKYMoRD

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., மகளிர் திட்ட அலுவலர் திருமதி.கெட்ஸி லீமா அமலினி, உதவி மகளிர் திட்ட அலுவலர்கள் திரு.அருண், திரு.ராமர், திரு.முருகன், திருமதி.அனிதா, திருமதி.லூர்திமேரி மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க பணியாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி